இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

அப்போது ஆண்டவர் கூறியது: “எகிப்தில் என் மக்கள் படும் துன்பத்தை என் கண்களால் கண்டேன்; அடிமை வேலைவாங்கும் அதிகாரிகளை முன்னிட்டு அவர்கள் எழுப்பும் குரலையும் கேட்டேன்; ஆம், அவர்களின் துயரங்களை நான் அறிவேன். எனவே எகிப்தியரின் பிடியிலிருந்து அவர்களை விடுவிக்கவும், அந்நாட்டிலிருந்து பாலும் தேனும் பொழியும் நல்ல பரந்ததோர் நாட்டிற்கு அவர்களை நடத்திச் செல்லவும் இறங்கி வந்துள்ளேன்” (விப 3:7-8)

# திருத்தந்தையின் தலைமைத்துவத்தின் 12 ஆண்டுகள்



2013 -ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரை கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாகத் தனது எளிமையான பண்பாலும், பணிவாலும் திருஅவையில் அளப்பரிய பணிகளைச் செய்து கொண்டிருப்பவர் திருத்தந்தை பிரான்சிஸ். 2013ஆம் ஆண்டு மார்ச் 13 அன்று திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் 12ஆவது ஆண்டினை கடந்த மார்ச் 13 வியாழனன்று நிறைவு செய்த்தார். மார்ச் 11, செவ்வாயன்று இயேசு சபையில் சேர்ந்ததன் 67 ஆண்டுகளையும் நிறைவுசெய்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். எனவே இன்றைய நமது நிகழ்வில், திருத்தந்தையின் தலைமைத்துவத்தின் பன்னிரண்டு ஆண்டு கள் என்னும் தலைப்பில் அவரது தலைமைத்துவப் பணி பற்றியக் கருத்துக் களைக் காண்போம்.

புனித பிரான்சிஸ் அசிசியாரின் பெயரை தனது பெயராக ஏற்று திருஅவையின் 266 ஆவது திருத்தந்தையாக, ஏழைகளுக்காக வாழும் ஏழைத் திருஅவையைக் கனவும் காண்பவராக, தலைமைத்துவப் பொறுப் பினை ஏற்றார் திருத்தந்தை பிரான்சிஸ். .

## திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் நாள்

திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் நாளில் இருந்தே தனது எளிமையான வாழ்வு முறையை அனைவருக்கும் வெளிப் படுத்தினார். 2013 -ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், முன்னாள் திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் அவர்கள் தனது தலைமைத்துவப் பணியைத் துறப்பதாக அறிவித்ததைத் தொடர்ந்து, அதே ஆண்டு மார்ச் 13, புதன்கிழமையன்று கான்கிளேவ் எனப்படும் திருத்தந்தையைத் தேர்வு செய்யும் கர்தினால்கள் அவையின், இரண்டாம் நாள் ஐந்தாம் சுற்றில் திருத்தந்தையாகத் தேர்வு செய்யப்பட்டார் கர்தினால் பெர்கோலியோ.

முதல் நாளன்று அவருக்கு அவிக்கப்பட்ட வெள்ளை அங்கியின் மேல், திருத் தந்தைக்கே உரிய கருஞ்சிவப்பு நிறத்திலான தோள்சுற்றாடை (mozzetta) மற்றும் அதன்மேல் தங்கக் கழுத்துச் சிலுவை அணிவதை வேண்டாம் என்று கூறினார். அத்தகைய ஆடம்பரம் தமக்கு வேண்டாம் என்று கூறி, தாம் ஆயரான நாளிலிருந்தே அணிந்துவந்துள்ள இரும்பிலான கழுத்துச் சிலுவையை போதும் என்று கூறி தனது எளிமையான வாழ்வு முறையைத் தொடர்ந் தார்.

தொடர்ந்து, திருத்தந்தை பிரான்சிஸ் தமக்கென்று போடப்பட்ட அரியணையில் அமராமல், பிற கர்தினால்களைப் போலவே நின்றுகொண்டு, அவர்கள் அளித்த மரியாதையை அன்புடன் ஏற்றுக்கொண்டார்.

எல்லாவற்றையும் விட வத்திக்கான் புனித பேதுரு பெருங்கோவிலின் வெளி மேல்மாடத்தில் தோன்றி மற்றவர்களுக்கு ஆசீர் வழங்குவதற்கு முன்னர், தன்னை ஆசீர்வதிக்குமாறு மக்களைக் கேட்டுக் கொண்டதுடன், தனக்காக அனைவரும் செபிக்கும்படி கேட்டுக்கொண்டது குறிப் பிடத்தக்கது.

அன்று முதல் இன்று வரை தன்னுடைய ஒவ்வொரு மறைக்கல்வி உரை, மூவேளை செப உரை, தனிப்பட்ட மற்றும் பொதுச்சந்திப்புக்களின் உரைகளின் இறுதியில் “எனக்காக இறைவேண்டல் செய்ய மறக்க வேண்டாம்” என்று கூறுவதைத் தனது வழக்கமாகக் கொண்டவர்.

தனது பன்னிரண்டு ஆண்டு பணிக்காலத்தில் இதுவரை 10 முறை கர்தினால்கள் அவை யினை வழிநடத்தியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். இயேசு சபையின் முதல் திருத்தந்தையும், தென் அமெரிக்கக் கண்டத்தின் முதல் திருத்தந்தையுமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கர்தினால் ஹோர்கே மாரியோ பெர்கோலியோ (திருத்தந்தையின் இயற் பெயர்) அவர்கள், திருஅவையை கடந்த 12 ஆண்டுகளாக சீரும் சிறப்புமாக வழிநடத்தி வருகின்றார்.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் புதிதாக உருவாக்கிய 21 கர்தினால்கள் உட்பட மொத்தம் 140 புதிய கர்தினால்களை திருஅவையில் உருவாக்கியுள்ளார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தனது தலைமைப் பொறுப்பேற்ற நான்கு மாதங்களுக்குள் தமது முதல் சுற்றுமடலை 2013 -ஆம் ஆண்டு ஜூன் 29-ஆம் நாள் வெளியிட்டார். அம்மடல் *Lumen Fidei* "நம்பிக்கை ஒளி" என்னும் தலைப்பில் வெளியிடப்பட்டது. 2013ஆம் ஆண்டு நவம்பர் மாதம், வெளியிடப்பட்ட *Evangelii Gaudium* என்ற திருமடல், "*Laudato Si*" என்னும் இறைவா உமக்கே புகழ் என்ற ஏடு, *Fratelli Tutti* என்னும் நாமனைவரும் உடன்பிறந்தோர் என்ற திருமடல், “*Desiderio desideravi*” அதாவது, மிக மிக ஆவலாய் இருந்தேன்’, மற்றும் நான்காவது திருத்தூது மடலான ‘அவர் நம்மை அன்புகூர்ந்தார்' (*Dilexit nos*) என்ற திருத்தூது மடல் வரை அனைத்தும் மிக முக்கியம் வாய்ந்தவை. மேலும் குழந்தை களுக்கென அர்ப்பணிக்கும் வகையில் திருத்தூது அறிவுரை மடல் ஒன்றை தயாரிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் திருத் தந்தை பிரான்சிஸ் அவர்கள், பிப்ரவரி மாதம் 3, திங்கள்கிழமையன்று குழந்தை களுக்கென அர்ப்பணிக்கப்பட்ட, உலக குழந்தைகள் உரிமைகளுக்கான முதல் தினத்தையொட்டிய பன்னாட்டு கருத் தரங்கின் இறுதியில் எடுத்துரைத்ததும் குறிப்பிடத்தக்கது.

2024ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 ஞாயிற்றுக்கிழமை பிரான்சின் கோர்சிகா தீவுப்பகுதிக்கு ஒரு நாள் திருத்தூதுப்பயணம் மேற்கொண்டது வரை ஏறக்குறைய 47 திருப்பயணங்களை மேற்கொண்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். 1480ஆம் ஆண்டு திருமறைக்காக கொல்லப்பட்ட ஏறக்குறைய 800 மறைசாட்சிகள் உட்பட இதுவரை 942 இறையடியார்களை புனிதர்களாக அறிவித் துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். 2015ஆம் ஆண்டின் இறுதியில் இரக்கத்தின் யூபிலி ஆண்டை துவக்கிவைத்த திருத்தந்தை, இவ்வாண்டு எதிர்நோக்கின் திருப்பயணிகள் என்ற கருப்பொருளில் 2025ஆம் ஆண்டு யூபிலி ஆண்டாகாகக் கொண்டாட அழைப்புவிடுத்துள்ளார். 2023, 2024 ஆகிய ஆண்டுகளை யூபிலி ஆண்டிற்கான தயாரிப்பு ஆண்டுகளாகவும் 2025ஆம் ஆண்டினை யூபிலி ஆண்டு கொண்டாட்ட ஆண்டாகவும் அறிவித்தார் திருத்தந்தை. அதிலும் குறிப்பாக 2023ஆம் ஆண்டை “சங்க ஏடுகள் கற்றல் ஆண்டு” என்றும். 2024ஆம் ஆண்டை “இறைவேண்டல் ஆண்டு” என்றும் 2025 ஆம் ஆண்டை “எதிர்நோக்கின் திருப்பயணிகள் ஆண்டு” என்றும் வரையறுத்து சிறப்பிக்க அழைப்புவிடுத்தார்.



கடந்த பிப்ரவரி 14, வெள்ளிக்கிழமை முதல் உரோம் ஜெமெல்லி மருத்துவமனையில் மூச்சுக்குழல் அழற்சி நோய்க்கென சிகிச்சை பெற்று வரும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் விரைவில் பூரண உடல் நலம் பெற்று வத்திக்கான் திரும்பவும், தனது தலைமைத்துவப் பணியினைத் தொடர்ந்து ஆற்றவும் பல்வேறு தனிநபர்களும் குழுக்களும் தங்களது செபத்தினையும் கருத்தினையும் எடுத்துரைத்து வருகின் றனர்.

**மெரினா ராஜ் – வத்திக்கான்**

## திருத்தந்தையின் உடல்நிலையில் தொடர் முன்னேற்றம்

வத்திக்கான்: கடந்த பிப்ரவரி மாதம் 14-ஆம் தேதி முதல் உரோம் ஜெமெல்லி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் உடல்நிலையில் தற்போது தொடர்ந்து நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது என்று மார்ச் 12, புதன்கிழமை மாலை செய்தியாளர்களிடம் தெரிவித் துள்ளது திருப்பீடச் செய்தித் தொடர் பகம்.

இதுவரை எடுக்கப்பட்ட மருத்துவ பரிசோதனைகளின்படி, திருத்தந்தையின் உடல்நிலை நிலையானதாகவே உள்ளது என்றும், நேற்று எடுக்கப்பட்ட மார்பு ஊடுகதிர் (chest X-ray) அறிக்கை, முந்தைய நாட்களில் காணப்பட்ட முன்னேற்றங்களை கதிரியக்க ரீதியாக உறுதிப்படுத்தியுள்ளது என்றும் கூறியுள்ளது திருப்பீடச் செய்தித் தொடர்பகம்.

மேலும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர் களுக்கு, பகலில் அதிக அளவிளான ஆக்ஸிஜனேற்ற சிகிச்சையும், இரவு ஓய்வின் போது, உடலில் துவாரம் உருவாக்காமல் வாய் வழியாக செயற்கை முறை ஆக்ஸிஜன் வழங்கல் சிகிச்சையும் (non-invasive mechanical ventilation) தொடர்கிறது என்றும் குறிப்பிட்டுள்ளது திருப்பீடச் செய்தித்துறை.

மார்ச் 12, புதன்கிழமை காலை, திருத்தந்தை புனித ஆறாம் பவுல் அரங்கில் நிகழ்ந்துவரும் திருப்பீட உயர் அதிகாரி களுக்கான தவக்கால ஆண்டுத் தியானத்தில் அவர் காணொளி வழியாகப் பங்குபெற்ற பிறகு திருநற்கருணையைப் பெற்று இறைவேண் டலில் ஈடுபட்டார் எனவும், அதனைத் தொடர்ந்து தனக்கு வழங்கப்படும் சிகிச் சையைத் தொடர்ந் தார் எனவும் கூறியுள்ளது.

இந்நாள் மாலையிலும் அவர் தவக்கால ஆண்டுத் தியானத்தில் காணொளி வழியாகப் பங்குபெற்ற பிறகு இறைவேண்டல், ஓய்வு மற்றும் சுவாச உடலியக்க மருத்துவத்தைத் தொடர்ந் தார் (respiratory physiotherapy) என்றும் செய்தியாளர்களிடம் சுட்டிக் காட்டி யுள்ளது திருப்பீடச் செய்தித் தொடர்பகம்.

# டேசா ஜெயா கிறிஸ்து ஒளி பங்கில் ‘உடலின் இறையியல்’ கருத்தரங்கம் நடைபெற்றது

கடந்த 22,23 பிப்ரவரி 2025 டேசா ஜெயா கிறிஸ்து ஒளி பங்கில் படிவம் 4 மற்றும் 5 இடைநிலை பள்ளி மாணவர்களுக்கு உடலின் இறையியல் (TOB) எனும் பயிற்சி அருட்சகோதரி ரீத்தா மற்றும் அவ்ரது குழுவினரால் வழிநடத்தப்பட்டது. இப்பயிற்ச்சியில் மொத்தம் 32 மாணவர்கள் கலந்துகொண்டனர்.

உடலின் இறையியல் (Theology of the Body) அதைக் குறித்து நான் கேள்விப்பட்டிருந்தாலும் முதலில் அதன் பொருள் எனக்கு தெரியாது. எனவே, அது பற்றி மேலும் விபரம் அறிய எனக்கு ஆவலாக இருந்தது. ஆரம்ப பகுதியில் (Ice Breaking) கடவுள் என்பவர் யார்? என்பதை பற்றி எங்கள் ஒவ்வொருவரிடம் கேள்வி கேட்கப்பட்டது. என்னுடைய பதிலாகக் கடவுள் என் வழி துணையாளர் என்று நான் பகிர்ந்து கொண்டேன். மற்றவர்களும் கடவுள் அவர்களுக்கு யார் என்பதைவிவரித்தார்கள். இப்பயிற்சியில் கடவுள் மனிதனை தன் சாயலாக படைத்தார். அவருடைய அன்பின் அடையாளத்தை நம்முடைய முதல் பெற்றோர்கள் மூலம் எவ்வாறு வெளிப்படுத்தினார் என்பதையும், நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து உண்மையான அன்பை சிலுவை மரணத்தின் வழி தன் உயிரை தியாகம் செய்து தூய்மையான அன்பை நமக்கு வெளிப்படுத்தினார் என்பதையும் அறிந்து கொண்டேன்.

இரண்டாம் பகிர்வில் மனித பாலியல் (Human Sexuality) பற்றியும் பாலியல் தூண்டுதல்களை எதிர்ப்பது கடினம், ஆனால் அவற்றை எதிர்ப்பது சாத்தியமற்றது அல்ல என்பதை எங்களுக்கு உணர்த்தப்பட்ட்து. மன உறுதியுடன் விசுவாசத்தின் வழி எதையும் செய்ய முடியும் என்பதை நான் அறிந்துகொண்டேன். இந்த பகிர்வில் எனக்கு இருந்த பல சந்தேகங்கள், கேட்க தயங்கிய கேள்விகள் அனைத்திற்கும் தெளிவான பதில் கிடைத்தது.

மேலும். எனக்கு மிகவும் பிடித்த தருணம் நற்கருணை ஆண்டவரோடு தியானம் செய்தது. நான் கடவுளோடு தனிமையில் பேசியது, எனது குரலைக் கேட்டு அவர் எனக்கு பதில் கொடுத்தது எல்லாம் எனக்கு ஒரு புதிய அனுபவமாக இருந்தது.

மூன்றாவது பகிர்வில் திருமணம் (FTFF) Free, Total, Faithful, Fruithful Love இதைப்பற்றி பேசும்பொழுது எனக்கு தயக்கமாக இருந்தது. அதைப்பற்றி நான் குழு பகிர்வில் மற்றவர்களோடு பகிரும்பொழுது நிபந்தனையற்ற அன்பு, முழுமனதுடன் ஆன்மாவுடன் அன்பு, ஒருவர் மற்றவரை நேசிக்கும் அன்பு மற்றும் தூய ஆவியின் கனிகளின் வழி அன்பு என்னவென்று நாங்கள் கலந்துரையாடினோம்.

நிறைவாக, என்னுடைய உடல் ஆண்டவரின் ஆலயமாகவும், தூய ஆவியின் அடையாளமாகவும் உள்ளது என்பதை அறிந்தேன். அன்பு, மனித கண்ணியம் ஆகியவற்றைப் பற்றி புரிந்து


ஜோவக்கிம் எனி மைக்கல்

தெரிந்து கொண்டேன். எனக்கும் என் கடவுளுக்கும் உள்ள உறவை இன்னும் ஆழமாக புதுப்பிக்க இந்த பயிற்சி எனக்கு மிகவும் உறுதுணையாக இருந்தது.

இப்பயிற்சியை வழிநடத்திய குழுவினருக்கும், என் பங்கின் மறைக்கல்வி ஆசிரியர்களுக்கும் இவ்வேளையில் என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

-ஜோவக்கிம் எனி மைக்கல்

# திருஅவையில் பிறருக்காக உழைக்கும் எண்ணம் கொண்ட தன்னார்வலர்கள் தேவை

தன்னார்வத்தொண்டு என்பது மற்றவர்களுக்கு உதவுவதற்காக வெளியே செல்வது என்றும், திறந்த இதயம், உதவத்தயாராக இருக்கும் கரங்கள், விரைந்து செல்லத் தயாராக இருக்கும் கால்கள் போன்றவற்றைக் கொண்டவர்களாக தன்னார்வலர்கள் இருக்கின்றார்கள் என்றும் கூறினார் மருத்துவர் Vincenzo Trapani Lombardo

மார்ச் 8, 9 சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் வத்திக்கானில் நடைபெற இருக்கும், அரசு சாரா தொண்டு அமைப்புக்களும், தன்னார்வப் பணியாளர் அமைப்புக்களும் கலந்துகொள்ளும் யூபிலிக் கொண்டாட்டத்தை முன்னிட்டு வத்திக்கான் செய்திகளுக்கு இவ்வாறு எடுத்துரைத்தார் தன்னார்வலரும் மருத்துவருமான Vincenzo Trapani Lombardo

எப்போதும் பிறருக்கு உதவத் தயாராக இருக்கும் தன்னார்வலர்கள் ஒருபோதும் தங்களுக்குள் முடங்கிக்கிடப்பது கிடையாது என்றும், செயலற்ற நிலையிலிருந்து செயலுள்ள செயலாக மற்றவர்களின் வாழ்க்கையில் உதவுவதற்காக, சுறுசுறுப்பான மற்றும் தாராளமான ஈடுபாட்டிற்கு தங்களை ஈடுபடுத்திக் கொள்கிறார்கள் என்றும் கூறினார் வின்சென்சோ.

இரத்தவியல் மருத்துவரான வின்சென்சோ அவர்கள், ரேஜியோ கலாபிரியா பகுதியைச் சார்ந்தவர். யுனிதால்சி என்னும் இத்தாலிய பிறரன்பு தொண்டு நிறுவனத்துடன் இணைந்து நீண்ட காலமாகப் பணியாற்றி வருபவர். குறிப்பாக பெருந்தொற்றுக் காலத்தில் தேவையில் இருக்கும் மக்களுக்கு பணியாற்றியவர்.

தன்னார்வத் தொண்டு என்பது நன்கொடையின் செயல் மட்டுமல்ல மாறாக, உண்மையான மனித பரிமாற்றம் என்றும், இது பெறுபவர்களையும் உதவி வழங்குபவர்களையும் வளப்படுத்துகிறது என்றும் எடுத்துரைத்தார் வின்சென்சோ

**குருத்து ஞாயிறு 13-4–2025**
**பெரிய வெள்ளி 18-4-2025**

# நன்மை செய்வதும் உதவுவதும் கிறிஸ்தவர்களின் பொறுப்பு

கிறிஸ்தவர்களின் பொறுப்பு நன்மை செய்வது மட்டுமல்ல, மாறாக மற்றவர்கள் நன்மை செய்வதற்கு உதவுவது என்றும், நிலையான வாழ்வானது நாம் வாழ்கின்ற விதத்திலும், அன்பை வெளிப்படுத்துகின்ற விதத்திலும் வெளிப்படுகிறது, நம் உள்ளத்தை மாற்றும் கடவுளின் பிரசன்னத்திற்கு நம்மைத் திறக்கிறது என்றும் கூறினார் அருள்பணி ரொபர்த்தோ பசோலினி.

மார்ச் 10, திங்கள்கிழமை வத்திக்கான் தூய ஆறாம் பவுல் அரங்கத்தில் நடைபெற்ற தவக்காலத் தியானத்தின் இரண்டாம் பகுதியாக “நீதித் தீர்வையின் இறுதிநாள்” என்ற தலைப்பில் தனது கருத்துக்களை எடுத்துரைத்தபோது இவ்வாறு கூறினார் அருள்பணி ரொபர்த்தோ பசோலினி.

மத்தேயு நற்செய்தியில் கூறப்பட்டு, மைக்கேல் ஆஞ்சலோவின் புகழ்பெற்ற ஓவியத்தில் சித்தரிக்கப்பட்டுள்ள மக்களினத்தார் அனைவருக்கும் தீர்ப்பு என்னும் உவமையானது பிறரன்புச் செயல்களுக்கான அழைப்பாக விளக்கப்படுகிறது என்றும், இறுதித் தீர்ப்பு அல்ல மாறாக, ஒவ்வொரு நபரும் ஏற்கனவே அனுபவித்த எதார்த்தத்தை வெளிப்படுத்தும் ஓர் அறிவிப்பு என்றும் கூறினார் அருள்பணி பசோலினி.

இறையரசை அணுகுவதற்கான அளவுகோல் மதச்சார்பு அல்ல, மாறாக நற்செய்தியின் கண்ணோட்டத்தில், கிறிஸ்துவின் சீடர்களை முதன்மைப்படுத்துகின்ற பண்பு என்றும் அப்பண்பானது, மிகச்சிறிய நமது சகோதர சகோதரிகளிடத்தில் செலுத்தும் உறுதியான அன்பு என்றும் சுட்டிக்காட்டிய அருள்பணி ரொபர்த்தோ அவர்கள், கிறிஸ்தவர்களின் முதன்மையான பொறுப்பு நன்மை செய்வது அல்ல, மாறாக மற்றவர்கள் நன்மை செய்வதற்கு உதவுவதாகும் என்றும் எடுத்துரைத்தார்.

காலத்தின் முடிவில், கடவுளின் அரசு முழுமையாக வெளிப்படும், மனித குலத்தையும் இயற்கையையும் "புதிய வானங்களாகவும் புதிய பூமியாகவும்" மாற்றும் என்று திருஅவை மறைக்கல்வி எடுத்துரைக்கின்றது என்று கூறிய அருள்பணி ரொபர்த்தோ அவர்கள், இந்த நம்பிக்கை கிறிஸ்துவின் வாக்குறுதியில் வேரூன்றியுள்ளது என்றும், அன்பின் திட்டத்தின்படி, கடவுள் மனிதகுலத்தை அவருடைய உருவமாகவும் சாயலாகவும் மாற்றுவார் என்ற நம்பிக்கையுடன் வாழ அழைக்கப்படுகின்றோம் என்றும் எடுத்துரைத்தார்.

# நம்பிக்கையில் முதிர்ச்சி நமது முயற்சியாகட்டும்!

இன்று தவக்காலத்தின் 3-ம் ஞாயிறு. இன்றைய நமது வாசகங்கள் கடவுளின் இரக்கம், கருணை, மற்றும் மன்னிப்பு ஆகியவற்றை மையக் கருப்பொருளாக் கொண்டுள்ளன. முதல் வாசகத்தில், எகிப்தில் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் மீது ஏற்படுத்தப்பட்ட துன்பங்களுக்கு பதிலளிக்கும் விதமாக, கடவுள் தமது திருப்பெயரை மோசேக்கு வெளிப்படுத்துகிறார். கொரிந்தியர்களுக்கு எழுதிய முதல் திருமுகத்தின் இரண்டாம் வாசகத்தில், புனித பவுல் அவர்களுக்கு (மற்றும் நமக்கும்) விடுதலைப்பயணத்தில் கடவுளின் இரக்கமுள்ள செயலை அனுபவித்த, ஆனால் இரக்கமுள்ள கடவுளுக்கு எதிராக பாவம் செய்த தங்கள் மூதாதையர்களிடமிருந்து அவர்கள் ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதை நினைவூட்டுகிறார்.

நற்செய்தி கடவுளின் இரக்கத்தின் இரு நினைவூட்டல்களை முன்வைக்கிறது: முதலாவதாக, மக்களுக்கு ஏற்படும் தீமைகள் கடவுள் பாவிகளைத் தண்டிக்க விரும்புவதால் ஏற்படுவதில்லை என்று இயேசு தனது சீடர்களிடம் கூறுகிறார், இரண்டாவதாக, ஒரு தரிசு அத்தி மரம் நல்ல பலனைத் தரக்கூடிய அனைத்தையும் செய்ய மற்றொரு வாய்ப்புக்காக கெஞ்சும் அத்தி மரத் தோட்டக்காரனின் உவமையை இயேசு விவரிக்கிறார்.

இரக்கமுள்ள, கடவுள் கனியற்றவர்களும் சில நல்ல கனிகளைக் கொடுக்க மற்றொரு வாய்ப்பை வழங்கத் தயாராக இருக்கிறார் என்பதை இயேசு வலியுறுத்துகிறார். இந்த உவமையை மேலும் எடுத்துச் செல்ல, தோட்டக்காரரின் தரப்பில் இன்னும் ஒரு வருட கடின உழைப்பைக் கேட்கும் தோட்டக்காரருடன் இயேசுவை ஒப்பிடலாம். வளர்ச்சியை வளர்க்க இயேசு தன்னால் முடிந்த அனைத்தையும் செய்ய விரும்புகிறார்.

ஆனாலும், நம்பிக்கையில் நம் முன்னோர்களைப் போலவே, நம் கடவுளின் அற்புதமான செயல்களை நாம் மறந்துவிட்டோம். கடவுள் நம்மை எவ்வாறு தூய்மைப்படுத்தி உயிருள்ள தண்ணீரையும், நமது ஆன்மீகப் பயணத்திற்கான உணவையும் நமக்கு அளித்தார் என்பதை நினைவில் கொள்ளத் தவறிவிட்டோம் இருப்பினும், கடவுள் நம்மை நம் பாவ நிலையில் விட்டுவிட விரும்பவில்லை. கடவுள் நாம் விரும்பும் நல்ல பலனை வெளிப்படுத்துவதற்காக, வளர்ச்சியை விதைக்க இயேசு வந்துள்ளார்

மனம்மாறவிட்டால் அனைவரும் அப்படியே அழிவீர்கள் என்று இயேசு சற்றுக் கடினமான வார்த்தைகளைச் சொன்னாலும், அதற்கு அடுத்ததாக அவர், கடவுள் பாவிகள் மனம்மாறுவதற்காக எவ்வளவு பொறுமையோடு இருக்கின்றார் என்ற செய்தியைச் சுட்டிக் காட்டுகின்றார்.

கடவுள் நமக்குக் கொடுத்த நம்பிக்கையின் கொடையை உணர்ந்து, நல்ல பலனைத் தரும் வாழ்க்கையை வாழ்வதன் மூலம் அந்த நம்பிக்கைக்கு நாம் உண்மை உள்ளவர்களாக வாழக்கூடும். எனவே, நாம் மனம்மாற வேண்டும் என்பதற்காகப் பொறுமையோடும் இரக்கத்தோடும் பரிவோடும் இருக்கும் ஆண்டவரிடம் திரும்பி வந்து, அவர் வழியில் நடப்போம். அதன்வழியாக இறையருளை நிறைவாகப் பெறுவோம்.

-ஜோசப் ஆனந்த், மலாக்கா

**தவக்காலம் 3-ம் ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | வி.ப. 3: 1-3.13-15 |
| திரு.பாடல் | 103:1-2.3-4. 6-7. 8,11 |
| 2 வாசகம் | 1கொரி 10: 1-6,10-12 |
| நற்செய்தி | லூக்கா 13: 1-9 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 3**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை: வாரம் 3**